**<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF,</u>**
**<u>Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),</u>**
**<u>District Munsif, Arni.</u>**
**<u>O.S.18/2013</u>**

2025—ம் ஆண்டு நவம்பர் மாதம் 17ம் நாள் திங்கட்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3—ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**P.W.2 வாசுதேவன் வயது 53 த/பெ ஜெயராமன்**

**நேரம் - 1.55**

**<u>குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கை தாக்கல் செய்துள்ள வாதி தஞ்சி என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர் என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியும், சொத்தின் பட்டா பெயர் மாற்றம் செய்ய வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளார். தஞ்சி என்பவர் யாரிடமிருந்து கிரையம் பெற்றார் என்றால் சக்கரவர்த்தி என்பவரிடமிருந்து கிரையம் பெற்றார். சக்கரவர்த்தி என்பவர் கிரையம் கொடுப்பதற்கு முன்பு அவர் பெயரில் பட்டா இருந்ததா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

2. என்னை வாதி தஞ்சிதான் சாட்சியம் அளிக்க அழைத்து வந்தார் என்றால் சரிதான். அவர் பட்டா சம்மந்தமாக எங்கெல்லாம் முறையிட்டார் என்ற விவரம் எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான், அவர் சொல்லிதான் எனக்கு தெரியும்.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது.**

**நேரம் 2.00**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,
District Munsif Court,Arni